**யோகக் காட்சியும் ஞானக் காட்சியும்**
**இ. லம்போதரன் MD**
**சைவ சித்தாந்த பீடம், கனடா**
**www.knowingourroots.com**

**யோகக் காட்சி என்றால் என்ன?**

அட்டாங்க யோகத்தின் **இயமம், நியமம், பிரத்தியாகாரம், தாரணை, ஆசனம், பிராணாயாமம், தியானம், சமாதி** என்னும் எட்டுப் படிநிலைகளினூடாகச் செல்லும்போது ஆன்மாவின் மல அழுக்குகள் அடங்க அனுபவமாவது **யோகக் காட்சி**.

இதன்போது இருந்த இடத்தில் இருந்துகொண்டே எங்கும் நடப்பனவற்றைக் காணவும் அறியவும் முடியும். சற்று தூரத்தில் நடப்பவற்றை மட்டுமல்லாது இந்த உலகின் எப்பாகத்தில் நடப்பதையும் காணலாம், அறியலாம். இந்த உலகம் மட்டுமல்லாது வேறு வேறு உலகங்களின் நடப்பவற்றையும் காணலாம்; அறியலாம். ரிஷிகள் சுவர்க்கலோகத்தில் நடப்பதாகவும், பிரம்மலோகத்தில் நடப்பதாகவும் கூறிய புராணக்கதைகளின் உரையாடல்கள், விவரணங்கள் இவ்வகையான யோகக் காட்சியின் பெறுபேறுகளே.

யோகக் காட்சியினால் இப்போது நடப்பது மட்டுமல்லாது கடந்த காலத்தில் நடந்ததையும் கூடக் காணலாம், அறியலாம். காலத்தைக் கடந்து அக்காலத்தில் நடைபெற்ற மகாபாரத யுத்தத்தையும் காணலாம், ஸ்ரீ கிருஷ்ணரின் பகவத்கீதை உபதேசத்தையும் கேட்கலாம். தட்சணாமூர்த்தி அன்று கல்லாலின் கீழிருந்து உபதேசித்ததையும் பார்க்கலாம்.

கடந்த காலம் மட்டுமல்ல, எதிர்காலத்தில் நடக்கப்போவதையும் இவ்வாறே காணலாம்.

இது சிவஞானசித்தியாரில் விளக்கப்பட்டுள்ளது.

**அருந்து இன்பத் துன்பம் உள்ளத்து அறிவினுக்கு அராக ம் ஆதி**
**தரும் தன்வேதனையாம் காட்சி; சமாதியால் மலங்கள் வாட்டிப்**
**பொருந்திய தேச கால இயல்பு அகல் பொருள்க ள் எல்லாம்,**
**இருந்து உ ணர்கின்ற ஞானம் யோக நல் காண்டல் ஆமே.**

அதாவது சமாதிநிலையிலே உடலோ அல்லது உயிரோ எவ்விடமும் செல்லாமல் இருந்த இடத்தில் இருந்தவாறே இடம், காலம் ஆகிய தடைகளைக் கடந்து காணுதலும், அறிதலும் யோகக் காட்சியாகும்.

இதனையே திருமந்திரம் பின்வருமாறு கூறுகின்றது.

***தூர தரிசனம் சொல்லுவன் காணலாம்***
***காராரும் கண்ணி கடைஞானம் உட்பெய்தி***

***எராருந் தீபத் தெழிற்சிந்தை வைத்திடிற்***
***பாரா ருலகம் பகன்முன்ன தாமே.***

*சிந்தையை ஒளி மயமான இறையில் ஒடுக்கி நிற்க*
*சக்தியின் கடைக்கண் பார்வையினால் வருகின்ற ஞானத்தால்*
*தூர இடங்களில் நடப்பவை எல்லாம் புலனாகும்;*
*பூமி முதலான உலகங்கள் யாவும் பகலிலே தெரியும் தெளிவான காட்சியாகப் புலப்படும்.*

- திருமூலர் அருளிய திருமந்திரம், 10ம் திருமுறை – பாடல் 824

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் இவ்வாறு தான் யோகக் காட்சியினூடாகக் கண்ட பெருநாத வெடிப்பினூடாகத் தோன்றி விரிகின்ற அண்த்தொகுதியின் காட்சியின் வர்ணனை பின்வருமாறு விபரிக்கின்றார்.

***அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்***
***அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி***
***ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்***
***நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன***
***இன்னுழை கதிரில் துன்அணுப் புரையச்***
***சிறிய வாகப் பெரியோன் தெரியின்....***

- மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருமுறை 8.03

ஞானக் காட்சி என்பது யோகக் காட்சியை உள்ளடக்கி அதையும் கடந்து எங்கும் எதிலும் இறையை நேரடியாகக் காணல் ஆகும். இதை சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகின்றது.

***சூரிய காந்தக் கல்லின் இடத்தே செய்ய,***
***சுடர் தோன்றியிடச் சோதி தோன்றுமா போல்***
***ஆரியனாம் ஆசான் வந்து அருளால் தோன்ற,***
***அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்; தோன்றத்***
***தூரியனாம் சிவம் தோன்றும்; தானும் தோன்றும்;***
***தொல் உலகம் எல்லாம் தன்னுள்ளே தோன்றும்;***
***நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்கு உயிராய் எங்கும்***
***நின்ற நிலை எல்லாமுந் திகழ்ந்து தோன்றும்.***

மெய்கண்டசாத்திரம், சிவஞானசித்தியார் – பாடல் 280

***மிக்கது ஒரு பக்குவத்தில் மிகு சத்தி நிபாதம்***
***மேவுதலும், ஞானம் விளைந்து, ஓர் குருவின் அருளால்***
***புக்கு அனுட்டித்தே, நிட்டை புரிந்து ளோர்கள்***
***பூதலத்தில் புகழ் சீவன் முத்தர் ஆகித்,***

*தக்க பிரிய-அப்பிரியம் இன்றி, ஓட்டில்*
*தபனியத்தில் சமபுத்தி பண்ணி, சங்கரனோடு*
*ஒக்க உறைந்து, இவர் அவனை அவன் இவரை விடாதே,*
*உடந்தையாய்ச் சிவன் தோற்றம் ஒன்றுமே காண்பர்.*

- மெய்கண்டசாத்திரம், சிவஞானசித்தியார் – பாடல் 281

**நாவுக்கரசர் கண்ட ஞானக்காட்சி**

*வடியேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்*
*வளர்சடைமேல் இளமதியந் தோன்றுந் தோன்றும்*
*கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றுங்*
*காதில்வெண் குழைதோடு கலந்து தோன்றும்*
*இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்*
*எழில்திகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்*
*பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்*
*அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்*
*ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்*
*ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்*
*சேணாக வரைவில்லா லெரித்தல் தோன்றுஞ்*
*செத்தவர்தம் எலும்பினாற் செறியச் செய்த*
*பூணாணும் அரைஞாணும் பொலிந்து தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*கல்லாலின் நீழற் கலந்து தோன்றுங்*
*கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று*
*சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றும்*
*சூழரவும் மான்மறியுந் தோன்றுந் தோன்றும்*
*அல்லாத காலனைமுன் அடர்த்தல் தோன்றும்*
*ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்*
*பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்*
*பன்னிரண்டு கையுடைய பிள்ளை தோன்றும்*
*நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்*
*நான்மறையி னொலிதோன்றும் நயனந் தோன்றும்*
*உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்*
*மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்*

*புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்றும்*
*மாசிலாப் புன்சடைமேல் மதியந் தோன்றும்*
*இயல்பாக இடுபிச்சை ஏற்றல் தோன்றும்*
*இருங்கடல்நஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றும்*
*கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை*
*ஆயிரமா முகத்தினொடு வானில் தோன்றும்*
*புயல்பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*பாராழி வட்டத்தார் பரவி யிட்ட*
*பன்மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்*
*சீராழித் தாமரையின் மலர்க ளன்ன*
*திருந்தியமா நிறத்தசே வடிகள் தோன்றும்*
*ஓராழித் தேருடைய இலங்கை வேந்தன்*
*உடல்துணித்த இடர்பாவங் கெடுப்பித் தன்று*
*போராழி முன்ஈந்த பொற்புத் தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*தன்னடியார்க் கருள்புரிந்த தகவு தோன்றுஞ்*
*சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்றும்*
*மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்*
*வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்தல் தோன்றும்*
*துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்*
*தூயமா மதியுடனே வைத்தல் தோன்றும்*
*பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந்*
*திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்றும்*
*நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்றும்*
*நெற்றிமேல் கண்தோன்றும் பெற்றந் தோன்றும்*
*மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்றும்*
*மலைமகளுஞ் சலமகளும் மலிந்து தோன்றும்*
*பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்*
*அணிகிளரு முருமென்ன அடர்க்குங் கேழல்*

*மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்றும்*
*மணமலிந்த நடந்தோன்றும் மணியார் வைகைத்*
*திருக்கோட்டில் நின்றதோர் திறமுந் தோன்றுஞ்*
*செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்*
*பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*ஆங்கணைந்த சண்டிக்கும் அருளி யன்று*
*தன்முடிமேல் அலர்மாலை யளித்தல் தோன்றும்*
*பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று*
*பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றும்*
*கோங்கணைந்த கூவிளமும் மதமத் தம்முங்*
*குழற்கணிந்த கொள்கையொடுகோலந் தோன்றும்*
*பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

*ஆருருவ உள்குவார் உள்ளத் துள்ளே*
*அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும்*
*வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை*
*மகிழ்ந்தொருபால் வைத்துகந்த வடிவந் தோன்றும்*
*நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை*
*நெறுநெறென அடர்த்திட்ட நிலையுந் தோன்றும்*
*போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்*
*பொழில்திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.*

- திருநாவுக்கரச நாயனார் தேவாரம், திருமுறை – 6:018:1-11

**நாவுக்கரசர் கண்ட ஞானக்காட்சி**

*மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்*
*போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்*
*யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது*
*காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி*
*வாழியம் போற்றியென் றேத்தி வட்டமிட் டாடா வருவேன்*
*ஆழி வலவனின் றேத்தும் ஐயா றடைகின்ற போது*
*கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*எரிப்பிறைக் கண்ணியி னானை யேந்திழை யாளொடும் பாடி*
*முரித்த விலயங்க ளிட்டு முகமலர்ந் தாடா வருவேன்*
*அரித்தொழு கும்வெள் ளருவி ஐயா றடைகின்ற போது*
*வரிக்குயில் பேடையொ டாடி வைகி வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

***erippiṟaik kaṇṇiyi ṉāṉai yēntiḻai yāḷoṭum pāṭi***
***muritta vilayaṅka ḷiṭṭu mukamalarn tāṭā varuvēṉ***
***arittoḻu kumveḷ ḷaruvi aiyā ṟaṭaikiṉṟa pōtu***
***varikkuyil pēṭaiyo ṭāṭi vaiki varuvaṉa kaṇṭēṉ***
***kaṇṭē ṉavartirup pātaṅ kaṇṭaṟi yātaṉa kaṇṭēṉ***

*பிறையிளங் கண்ணியி னானைப் பெய்வளை யாளொடும் பாடித்*
*துறையிளம் பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்*
*அறையிளம் பூங்குயி லாலும் ஐயா றடைகின்ற போது*
*சிறையிளம் பேடையொ டாடிச் சேவல் வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*ஏடு மதிக்கண்ணி யானை யேந்திழை யாளொடும் பாடிக்*
*காடொடு நாடு மலையுங் கைதொழு தாடா வருவேன்*
*ஆட லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது*
*பேடை மயிலொடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*தண்மதிக் கண்ணியி னானைத் தையனல் லாளொடும் பாடி*
*உண்மெலி சிந்தைய னாகி யுணரா வுருகா வருவேன்*
*அண்ண லமர்ந்துறை கின்ற ஐயா றடைகின்ற போது*
*வண்ணப் பகன்றிலொ டாடி வைகி வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*கடிமதிக் கண்ணியி னானைக் காரிகை யாளொடும் பாடி*
*வடிவொடு வண்ண மிரண்டும் வாய்வேண் டுவசொல்லி வாழ்வேன்*
*அடியிணை ஆர்க்குங் கழலான் ஐயா றடைகின்ற போது*
*இடிகுர லன்னதொ ரேன மிசைந்து வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*விரும்பு மதிக்கண்ணி யானை மெல்லிய லாளொடும் பாடிப்*
*பெரும்புலர் காலை யெழுந்து பெறுமலர் கொய்யா வருவேன்*
*அருங்கலம் பொன்மணி யுந்தும் ஐயா றடைகின்ற போது*
*கருங்கலை பேடையொ டாடிக் கலந்து வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*முற்பிறைக் கண்ணியி னானை மொய்குழ லாளொடும் பாடிப்*
*பற்றிக் கயிறறுக் கில்லேன் பாடியும் ஆடா வருவேன்*
*அற்றருள் பெற்றுநின் றாரோ டையா றடைகின்ற போது*
*நற்றுணைப் பேடையொ டாடி நாரை வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*திங்கள் மதிக்கண்ணி யானைத் தேமொழி யாளொடும் பாடி*
*எங்கருள் நல்குங்கொ லெந்தை யெனக்கினி யென்னா வருவேன்*
*அங்கிள மங்கைய ராடும் ஐயா றடைகின்ற போது*
*பைங்கிளி பேடையொ டாடிப் பறந்து வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

*வளர்மதிக் கண்ணியி னானை வார்குழ லாளொடும் பாடிக்*
*களவு படாததொர் காலங் காண்பான் கடைக்கணிற் கின்றேன்*
*அளவு படாததொ ரன்போ டையா றடைகின்ற போது*
*இளமண நாகு தழுவி யேறு வருவன கண்டேன்*
*கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.*

- திருநாவுக்கரச நாயனார் தேவாரம், திருமுறை – 4:003:1-11

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகள் கண்ட ஞானக்காட்சி

*நீறணிந்த திருமேனி பொலிந்து தோன்றும்*
*நெற்றிமேற் கண்தோன்றும் மதியந் தோன்றும்*
*ஆறணிந்த சடைதோன்றும் அம்மை தோன்றும்*
*அரைக்கசைத்த புலியாடை அசைந்து தோன்றும்*
*ஏறமர்ந்த எழில்தோன்றும் இசையுந் தோன்றும்*
*எடுத்ததிருப் பதந்தோன்றும் மழுமான் தோன்றும்*
*பேறளிக்குந் திருக்கரத்தின் பெருமை தோன்றும்*
*பிரியாமல் என்னையாள் பெருமா னார்க்கே*

*கறுத்திருண்ட கண்டத்தின் பெருமை தோன்றும்*
*கதிகாட்டுங் கண்ணிணைகள் கலந்து தோன்றும்*
*செறுத்தவர்தம் புரமட்ட சிரிப்புத் தோன்றும்*
*தேவர்கணம் சூழ்ந்திருக்கும் சிறப்புத் தோன்றும்*
*ஒறுத்தவர்த மென்பெல்லா முடம்பிற் றோன்றும்*
*ஒளிதோன்றும் ஓங்கார வாசி தோன்றும்*

*சிறுத்தவிடை யுமையாளோர் பாகந் தோன்றும்*
*சிவசிவா சீவன்சிவ னெனக்கண் டேனே*

பட்டினத்துப் பிள்ளையார் கண்ட ஞானக் காட்சி

*மாயப்படலங் கீறித் தூய*
*ஞான நாட்டம் பெற்றேன்;*
*பெற்றபின் மெய்மைய,*
*நின்பெருந்தன்மையும் கண்டேன்;*
*காண்டலும், என்னையும் கண்டேன்; பிறரையும் கண்டேன்;*
*அன்னிலைய வனைத்தும் கண்டேன்;*
*என்னே நின்னைக் காணாமாந்தர்*
*தம்மையுங் காணாத் தன்மையோரே.*

- பட்டினத்துப் பிள்ளையார் அருளிய
திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருமுறை 11.028.13